**<u>அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரல்</u>**

வெற்றிடம் ஏற்படவுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர் பதவிக்குத் தகைமையுடைய **<u>இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து</u>** விண்ணப்பங்களைக் கோருவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமைகள் மற்றும் அனுபவம் -

1. இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தில் 08 வருடங்களுக்குக் குறையாத செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தையுடைய உத்தியோகத்தரொருவராக இருத்தல்.
2. சேவைக்காலத்தினுள் கண்டித்தலைத் தவிர வேறு எந்தவொரு ஒழுக்காற்றுத் தண்டனையையும் பெறாதவராக இருத்தல்.
3. விசேட தரத்திற்குப் பதவியுயர்த்தப்பட்டதன் பின்னர் அனைத்து சம்பளவேற்றங்களையும் உழைத்துப் பெற்றிருத்தல்.
4. அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைகளுக்கு அமைவாகத் தகைமைகள் பரிசீலிக்கப்படும் தினத்திற்கு உடன் முந்திய ஐந்து (05) வருடங்களில் செயலாற்றுகை மதிப்பீடுகள் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதற்கு மேலான செயலாற்றுகை மட்டத்திலிருத்தல்.
5. ஆங்கில மொழித் தேர்ச்சியைக் கொண்டிருத்தல்.

- குறிப்பு – பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் சகல வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

- உடற் தகைமைகள் - சகல விண்ணப்பதாரிகளும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்குப் போதிய உடல் மற்றும் உள ரீதியில் தகைமையுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

- வயது – ஏற்புடையதன்று.

- தெரிவு செய்தல் - விண்ணப்பதாரிகளின் சேவை அனுபவம் மற்றும் திறன் மதிப்பீட்டிற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் புள்ளி வழங்கல் திட்டத்திற்கு அமைவாக அவ்வாணைக்குழுவினால் நடாத்தப்படும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் தெரிவு இடம்பெறும்.

- விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்தல் - ஏற்புடைய அனைத்துத் தகைமைகளையும் உள்ளடக்கி சுயமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிபரக்கோவையைப் பின்வரும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி – 2022.12.27.

தவிசாளர்  
அரசாங்க சேவை ஆணைக்குழு  
1200/9, ரஜமல்வத்தை வீதி  
பத்தரமுல்ல

- இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு முரணான முறையில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

- இந்த நியமனம் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

செயலாளர்  
அரசாங்க சேவை ஆணைக்குழு  
1200/9, ரஜமல்வத்தை வீதி  
பத்தரமுல்ல  
2022.12.13